செ.வெ.எண்:21 நாள்:14.04.2017

# அரியலூர் மாவட்டத்தில் ரொக்கப்பணமில்லாமல் மின்னணு பணப்பரிவர்த்தனை (Dig Dhan Mela) மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் ஊக்கப்படுத்தும் நிகழ்ச்சியினை பார்வையிட்டார்.

அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் **ரொக்கமில்லாமல் மின்னணு பணப்பரிவர்த்தனை** ஊக்கப்படுத்தும் 100-வது நாள் (**100th Dig Dhan Mela**) நிகழ்ச்சி மற்றும் **மாண்புமிகு பாரத பிரதமர்** அவர்களின் உரையாற்றும் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (14.04.2017) பார்வையிட்டார்.

**இந்நிகழ்ச்சி குறித்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

இந்தியா முழுவதும் **ரொக்கமில்லாமல் மின்னணு பணப்பரிவர்த்தனை** முறைகளை பயன்படுத்தி அனைத்து கிராம மற்றும் நகர்புற மக்கள் மேற்கொள்ள **மாண்புமிகு பாரத பிரதமர்** அவர்கள் அறிவுறுத்தியிருந்தார். இவ்வாறு 25.12.2016 முதல் இன்று (14.04.2017) வரை தொடர்ந்து **100 நாட்கள்** வெவ்வேறு இடங்களில் மின்னணு பணப்பரிவர்த்தனை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து இன்று (14.04.2017) **100-வது நாள் விழாவை** ஊக்கப்படுத்தும் விதமாக (**100th Dig Dhan Mela**)-வை நாக்பூரில் **மாண்புமிகு பாரத பிரதமர்** அவர்கள் தலைமையில் நடைபெறும், இந்நிகழ்ச்சியினை தேசிய அளவில் அனைத்து இடங்களிலும் **நேரடி ஒளிபரப்பு செய்வதற்கு** ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடைப்பெற்றது.

இதன் ஒரு பகுதியாக, அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ரொக்க பணமில்லாமல் வியாபார பரிமாற்றங்கள் மின்னனு முறையில் செய்ய நுகர்வோர் மற்றும் வணிகர்கள் மின்னணு பரிமாற்றங்கள் தொடர்பான ஆவணங்களான 1.வங்கி **அட்டைகள் (Prepaid / Debit / Credit), 2.**ஆதார் எண் மூலம் பண பரிமாற்றம் **(AEPS), 3.**வங்கிகளின் கைபேசி செயலிகள் **(Smart Phone)**, 4.அலைபேசி சேவை **(Basic Set-USSD), 5.**மின்னணு பணப்பெட்டகம் **(Wallet)** ஆகியவை கொண்டு செயல்முறை காண்பிக்கப்பட்டது. மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் நேரடி சொற்பொழிவும் காண்பித்து ஊக்கப்படுத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், ஜெ.தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மின்னணு பணபரிமாற்ற முறைகளை ஊக்குவிக்கும் விதமாக பேச்சிப்போட்டிகள், கட்டுரைப்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கபட்டு, **மாண்புமிகு பாரத பிரதமர்** அவர்களின் தலைமையில் நடைபெறும் **100-வது விழாவை (100th Dig Dhan Mela) நேரடி ஒளிப்பரப்பினை** மாணவ, மாணவியர்களுக்கு காணவும், ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன.

மேலும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும் இந்நிகழ்ச்சி நேரடி ஒளிப்பரப்பு செய்யப்பட்டன. மின்னணு பரிவர்த்தனை ஊக்கப்படுத்த வங்கி அலுவலர்கள், வியாபாரிகள், பொது சேவை மையம் ஆப்ரேட்டர்கள் ஆகியோர்கள் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கு வரவழைக்கப்பட்டு **மின்னணு பரிவர்த்தனை தொடர்பான நிகழ்ச்சிகள் செயல்முறையில்** காண்பிக்கப்பட்டு, நடத்தப்பட்டன. எனவே, பொதுமக்களும் ரொக்கமில்லாமல் மின்னணு பணப்பரிவர்த்தனையை பயன்படுத்தி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.லோகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரெங்கராஜன், பாரத ஸ்டேட் முன்னோடி வங்கி மேலாளர் திரு.இளஞ்சேரன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் திரு.பழனிசாமி மற்றும் மகளிர் திட்ட அலுவலர்கள், மகளிர் குழுவினர்கள், வளர்ச்சித்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**